தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 22/2020
நாள்.09.12.2021

திரு. வி.அன்பழகன்,
பூந்தமல்லி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
திருவேற்காடு நகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை மாவட்டம், பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், 13/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வி.அன்பழகன் என்பவரின் 10.02.2020 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.02.2020 அன்று பெறப்பட்டு 22/2020 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், திருவேற்காடு நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், மனு மீதான அவருடைய அறிக்கை மற்றும் திருவேற்காடு நகராட்சியின் முன்னாள் ஆணையாளர்கள் அளித்த அறிக்கைகள் ஆகியவைகள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது:–

## ஆணை

சென்னை, பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், 13/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வி.அன்பழகன் என்பவர் தன் மனுவில் கீழ்க்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்:–

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சியில் 18 வார்டுகளுக்கும் தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை 2017-2018ம் ஆண்டில் விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக சன் வியூ என்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்துக்கு டெண்டர் கொடுக்கப்பட்டது.

2017-2018 ல் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை செய்த சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றவில்லை என்று புகார் எழுந்துள்ளது.

1. ஒப்பந்தத்தின்படி தெரு விளக்கு பராமரிப்பு குறித்து பெறப்படும் புகார்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்படவில்லை.

2. மின் உதிரி பாகங்கள் மாற்றப்படும் போது பழைய பொருட்கள் நகராட்சி பொறியியல் பிரிவு பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் இல்லை.

இப்படி பல புகார்கள் எழுந்தது. இது தொடர்பாக உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையிலும் சன் வியூ எண்டர்பிரைசஸ் மீது புகார்கள் கூறப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் தெரு விளக்கு பராமரிப்பு பணி தொடர்பாக ந.க.எண்.511/2018/ஈ1 தேதி 02.05.2018 டெண்டர் கோரப்பட்டது. இந்த டெண்டரில் சன் வியூ எண்டர்பிரைசஸ், கணபதி கோயம்புத்தூர் மற்றும் இலட்சமி எண்டர்பிரைசஸ், சிட்லபாக்கம், சென்னை - 64, இரு நிறுவனங்களும் கலந்து கொண்டது. 2017-2018 உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையின் படி, சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை பிளாக் லிஸ்டில் சேர்த்து இருக்க வேண்டும். ஆனால் ஆணையராக இருந்த திருமதி.விஜயகுமாரி, பொறியாளராக இருந்த சண்முகம் இருவரும் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் ரூ.10 இலட்சம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, பிளாக் லிஸ்டில் வைக்காமல், டெண்டரில் கலந்து கொள்ள அனுமதித்தார்கள். மேலும் டெண்டரில், நகராட்சிகளில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை ஒப்பந்தம் எடுத்த அனுபவம் இருக்க வேண்டும் என்று விதிமுறைகளை சேர்த்து, சன் வீயூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு ஆதரவாக திருவேற்காடு நகராட்சி ஆணையர் திருமதி.விஜயகுமாரி செயல்பட்டார்.

2018-2019 தெரு விளக்கு பராமரிப்பு டெண்டரின் மதிப்பு ரூ.126.85 இலட்சம். டெண்டர் மதிப்பை விட 0.46 சதவிகிதம் குறைவாக விலைப்புள்ளி குறிப்பிட்டதால், சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு டெண்டர் கொடுக்கப்பட்டது.

2018-2019ல் தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தத்தில் உள்ளபடி நகராட்சிப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட பராமரிப்பு விவரப் பட்டியல்களின் படி 2x36 W CFL light and 70 W SV lamp ஆகிய தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை என்று நகராட்சி பொறியாளர் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பினார். அந்த நோட்டீசில், சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு பணம் பட்டுவாடா செய்யும் போது ரூ.1,75,536/- பிடித்தம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நோட்டீசுக்கு சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனம் பதில் அளிக்கவில்லை. ஆனால் பொறியாளர் அனுப்பிய நோட்டீஸ் திரும்ப பெறப்படாமல், அந்த கோப்பு முடக்கப்பட்டது.

உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையில் 2018-2019-ல் தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தத்தில் உள்ளபடி நகராட்சிப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட பராமரிப்பு விவரப் பட்டியல்களின் படி 2x36 W CFL light and 70 W SV lamp ஆகிய தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் 30.06.2019 உடன் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் தெரு விளக்கு டெண்டர் முடிவடையும் நிலையில், சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனம் கோவையை சேர்ந்த நிறுவனம் என்பதால், ஒராண்டுக்கு நீட்டிப்பு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. திருவேற்காடு நகராட்சி ஆணையர் திருமதி. சித்ரா, 28.05.2019 அன்று நகராட்சியின் சாதாரண கூட்டத்தில், சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தத்தை ஒராண்டு நீட்டிக்கவும், இது தொடர்பான கருத்துருவை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பிவைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தின் பேரில் திருவேற்காடு நகராட்சி ஆணையர் திருமதி.சித்ரா, ந.க.எண்.511/2018/இ1 நாள்.14.06.2019, கடிதம் மூலம் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு ஒராண்டுக்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் மூலம் அனுப்பினார். நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமை பொறியாளர் நடராசன், ஆர்.ஒ.சி. எண்.45490/2012/டிஒ1 தேதி. 04.07.2019 ல் தெரு விளக்கு பராமரிப்பு பணியை ஒராண்டுக்கு நீட்டிக்க அனுமதி வழங்கினார். 04.07.2019ல் தான் நகராட்சி நிர்வாக ஆணையரகம் நீட்டிக்க அனுமதி வழங்கி கடிதம் அனுப்பியது. ஆனால் 01.07.2019 முதல் 30.06.2020 வரை நீட்டிக்க திருவேற்காடு நகராட்சி அனுமதி அளித்துவிட்டது. தெருவிளக்கு பராமரிப்பு பணியை சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு சட்டத்துக்கு புறம்பாக, விதிமுறைகளை 01.07.2019 முதல் 30.06.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒராண்டுக்கு நீட்டிப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்பிய ஆணையர் திருமதி. சித்ரா 2018-2019 ல் தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தத்தில் உள்ளபடி நகராட்சிப் பொறியாளரால் சான்றளிக்கப்பட்ட பராமரிப்பு விவரப் பட்டியல்களின்படி 2x36 W CFL light and 70 W SV lamp ஆகிய தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை என்று நகராட்சி பொறியாளர் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பிய விவரங்களை குறிப்பிடவில்லை. 2017-18, 2018-19, 2019-2020 ஆகிய ஆண்டுகளில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை மீறி செயல்பட்ட சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு டெண்டர் கொடுத்தது, சட்டத்துக்கு புறம்பானது.

2014-15 ஆம் ஆண்டு முதல் திருவேற்காடு நகராட்சியில் விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக நகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2. மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர், திரு.வி.அன்பழகன் அவர்கள் திருவேற்காடு நகராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை லஞ்சம் வாங்கிக் கொண்டு, விதிமுறைகளை மீறி சட்டத்துக்கு புறம்பாக சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு பணி கொடுத்த திருவேற்காடு நகராட்சி ஆணையர்கள் திருமதி.விஜயகுமாரி, திருமதி.சித்ரா, நகராட்சி பொறியாளராக இருந்த திரு. சண்முகம் (செம்பாக்கம் நகராட்சி ஆணையர் பொறுப்பு), நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமைப் பொறியாளர் நடராசன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு முஜிபுர்ரகுமான் ஆகியோர் மீது முழுமையான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

3. திருவேற்காடு நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் திருமதி.வ.விஜயகுமாரி அவர்கள் தன் அறிக்கையில் கீழ்க்காணுமாறு தனது விளக்கத்தினை அளித்துள்ளார்:-

திருவேற்காடு நகராட்சியில் நகராட்சி ஆணையாளராக 09.08.2017 முதல் 31.08.2018 வரை பணிபுரிந்து வந்தேன். முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்களை மறுக்கிறேன்.

- 2017-18ம் ஆண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பு தொடர்பாக பெறப்படும் புகார்களுக்கு புகார் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்து உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டது.

- தெருவிளக்கு பராமரிப்பு 01.04.2017 முதல் 31.03.2018 முடிய பராமரிப்பு பணி மேற்கொள்ள 31.03.2017ம் தேதிய செயல்முறை உத்திரவில் ஒப்பந்தபுள்ளியில் தெரிவித்துள்ள விலை விகிதத்தின்படி, கணக்கிட்டு ஒரு மாதத்திற்கான தொகையில் 0.4 சதவீதம் பழைய பொருட்களுக்கான விலையினை கழிவு செய்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

- இதுகுறித்து உள்ளாட்சி நிதி தணிக்கையில் எழுப்பப்பட்ட தணிக்கை தடைக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டது.

- மேலும், 2018-19 ஆம் நிதியாண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவேற்காடு நகராட்சி நகர மன்ற தீர்மானம் எண்.330 நாள்.28.02.2018ல் அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு 19.03.2018-ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.45490/2012/டிஒ1 நாள்.12.04.2018ல், தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒராண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், 02.05.2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் மாநில அளவிலான நாளிதழ்கள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 06.06.2018ல் ஒளிவுமறைவற்ற நகராட்சி ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும், இணையதளம் மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, சன்வியூ எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் மற்றும் லட்சுமி எண்டர்பிரைசஸ், சென்னை ஆகிய இரு நிறுவனங்கள் கலந்துக் கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனம் தொழில்நுட்ப தகுதி தேர்வு பெற்றுள்ளதாலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதால் இந்நகர மன்ற தீர்மானம் எண்.387 நாள்.11.06.2018ல் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்ததால், இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.511/2018/இ1 நாள்.20.06.2018ல் 01.07.2018 முதல் 30.06.2019 முடிய தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள 2 x 36w CFL மற்றும் 70w SV Lamp ஆகிய இரு விளக்குகள் பராமரிக்கப்படவில்லை என நகராட்சி பொறியாளர் சன்வியு எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பி, அதற்கான தொகை ரூ.1,75,536/- பிடித்தம் செய்ய வேண்டும் என

தெரிவித்துள்ளதை முற்றிலும் மறுக்கிறேன். அது போன்ற நிகழ்வுகள் ஏதும் நிகழவில்லை. பொதுவாக ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் போது, வெவ்வேறு வகையான விளக்குகள் பராமரிப்பில் இருக்கும் போது பழுது ஏற்படும் தெரு விளக்குகள் மட்டுமே ஒப்பந்ததாரரால் பழுது நீக்கம் செய்யப்படும். ஒரே விளக்குகள் பலமுறை பழுது ஏற்பட்டாலும், அதனை அந்த ஒப்பந்ததாரரே மீண்டும் மீண்டும் பழுது நீக்கம் செய்ய வேண்டும். இதற்காக கூடுதலாக எவ்வித தொகையும் வழங்க இயலாது. இவ்வாண்டிலும், எவ்வித கூடுதல் தொகையும் வழங்கப்படவில்லை. நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தெருவிளக்கு பராமரிப்பு பணிகளின் ஒப்பந்தத்தில் எவ்வித விதிமுறைகளையும் மீறப்படவில்லை. சட்டத்திற்கு புறம்பாகவும் எவ்விதமான கையூட்டலும் பெறப்படாமலும், நியாயமாகவும், நேர்மையாகவும், மனசாட்சியின்படியும், நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பு ஏற்படாமல் பணி புரிந்தேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படி திருவேற்காடு நகராட்சியிலிருந்து பம்மல் நகராட்சிக்கு நகராட்சி ஆணையாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டு 31.08.2018 பிற்பகல் முதல் திருவேற்காடு நகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

4. திருவேற்காடு நகராட்சியின் முன்னாள் ஆணையர் திருமதி.சித்ரா அவர்கள் தன் அறிக்கையில் கீழ்க்காணுமாறு தன் விளக்கத்தினை அளித்துள்ளார்:-

நான், திருவேற்காடு நகராட்சி ஆணையராக 31.08.2018ல் பணி பொறுப்பு ஏற்று 15.11.2019 வரை பணிபுரிந்தபோது திருவேற்காடு நகராட்சியின் 18 வார்டுகளில் மின் விளக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொண்ட சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு 2019-2020-ம் ஆண்டுக்கு பணி நீட்டிப்பு வழங்கியது குறித்து மூத்த பத்திரிக்கையாளர் திரு.V.அன்பழகன், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் மனு தாக்கல் செய்ததன் பேரில் என் மீதான குற்றச்சாட்டுகளுக்கான அறிக்கை சமர்ப்பிக்க இம்முறைமன்றம் உத்திரவிடப்பட்டதின் பேரில் மேற்படி பொருள் தொடர்பான திருவேற்காடு நகராட்சி (கோப்பு எண்.511/2018/இ1) கோப்பினை பார்வையிட்டு எனது பணிவான அறிக்கையை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளில் தெரு விளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் (O & M ) மேற்கொள்ள ரூ.126.85 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்படி பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 28.02.2018 நாளிட்ட தனி அலுவலர் கூட்ட பொருள் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளர் மூலம் 12.04.2018 தேதிய கடிதத்தின் வழி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 2000ன்படி (Tender Transparency Act 2000) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

02.05.2018 தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை "தினமணி" தமிழ் நாளேட்டிலும் "Indian Express" ஆங்கில நாளேட்டிலும் விளம்பரம் வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, உரிய வழி முறைகள் பின்பற்றப்பட்டு சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு

01.07.2018 முதல் 30.06.2019 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 31.08.2018ல் நான் திருவேற்காடு நகராட்சி ஆணையராக பணி பொறுப்பு ஏற்றேன்.

மேற்படி, சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஓராண்டு ஒப்பந்த பணிக்காலம் 30.06.2019ல் முடிவடைவதன் பேரில், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனம் பணி நீட்டிப்பு வழங்ககோரியதன் பேரில், 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்குவதற்கு 25.05.2019 நாளிட்ட தனி அலுவலர் கூட்ட தீர்மானத்தின் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்டதன் பேரில், 14.06.2019 நாளிட்ட கடிதத்தின் வழி பிரேரணை செங்கல்பட்டு நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி பிரேரணை 25.06.2019 நாளிட்ட கடிதத்தின் வழி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளர் அவர்களின் 04.07.2019 தேதிய கடிதத்தின் வாயிலாக "சன் வியூ எண்டர்பிரைசஸ்" நிறுவனத்திற்கு (As per section -3 Clause 14 of the approved Bid Document) ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதன்பேரில் "சன் வியூ எண்டர்பிரைசஸ்" நிறுவனத்திற்கு தெரு விளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஓராண்டுக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது என்பதையும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டவாறு விதி முறைகளை மீறி சட்டத்துக்கு புறம்பாக பணி நீட்டிப்பு வழங்கப்படவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மனுதாரரின் மனு மீதான புகார்களுக்கு, அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 26.07.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் திருவேற்காடு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. திருவேற்காடு நகராட்சி ஆணையர், தன்னுடைய கடிதம் ந.க.எண்.3647/2021/இ, நாள்.02.09.2021-ல் கீழ்க்காணுமாறு அவருடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்:-

- தெருவிளக்கு பராமரிப்பு பணிகளில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை உரிய பதிவேட்டில் பதிவு செய்து, உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், பராமரிக்கப்பட்ட பதிவேடுகளில் முதல் பக்கத்தினை இத்துடன் இணைத்தனுப்படுகிறது. மேலும், இதுநாள் வரையில் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

- தெருவிளக்கு பராமரிப்பு பணிகளில் பழைய பொருட்களை நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டத்தில், மேற்படி தெருமின்விளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள வழங்கப்பட்ட பணி உத்திரவில் பழைய பொருட்களுக்கான விலை விகிதத்தின் படி கணக்கிட்டு ஒரு மாதத்திற்கான தொகையில் 0.4 சதவீதம் பழைய பொருட்களுக்கான விலையினை கழிவு செய்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கழிவு பிடித்தம் செய்யப்பட்டதற்கான பணி உத்திரவு நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- 2018-2019 ஆம் நிதியாண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவேற்காடு நகராட்சி நகர மன்ற தீர்மானம் எண்.330 நாள் 28.02.2018ல் அனுமதி வழங்கப்பட்டு, 19.03.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.45490/2012/டிஒ1 நாள்.12.04.2018ல் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஓராண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், 02.05.2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 06.06.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் மாநில அளவிலான நாளிதழ்கள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் இணையதளம் மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள 70 W மற்றும் 2x36W CFL விளக்குகள் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு தற்போதும் நல்ல நிலையில் மக்கள் உபயோகத்தில் உள்ளது என திருவேற்காடு நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. இம்முறைமன்ற 27.10.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் 02.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. 02.11.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரான திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் கூட்டாக கீழ்காணுமாறு தங்கள் வாக்குமூலத்தை அளித்துள்ளனர்.:-

பூந்தமல்லியைச் சேர்ந்த அன்பழகன் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள தெருவிளக்கு பராமரிப்புப் பணிகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. நகராட்சி தீர்மான எண்.775 நாள்.28.05.2019ன்படி தெரு விளக்கு பராமரிப்புப் பணிகளுக்கான கால நீட்டிப்பு செய்திட நகராட்சி ஆணையரின் 14.06.2019 நாளிட்ட கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட கருத்துருவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் தனது 04.07.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பராமரிப்புப் பணிக்கான கால நீட்டிப்பை ஒரு வருட காலத்திற்கு (01.07.2019 முதல் 30.06.2020) அளித்துள்ளார் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் பதிவு செய்கிறோம்.

மேலும் பராமரிப்புப் பணி மேற்கொள்ள வழங்கப்பட்ட பணி உத்தரவில் பழைய பொருட்களுக்கான விலை விகிதத்தின்படி கணக்கிட்டு ஒருமாதத்திற்கான தொகையில் 0.4 சதவீதம் பழைய பொருட்களுக்கான விலையினை கழிவு செய்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படுவது வழக்கம். ஆனால், தணிக்கைத் துறையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சுமார் 1.75 இலட்சம் நிதியிழப்பு இன்னும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூல் செய்யப்படவில்லை. தணிக்கைத் தடையினரால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட தொகையினை 15 நாட்களில் ஒப்பந்ததாரரால் நகராட்சியில் செலுத்தியுள்ள டெபாசிட் தொகையிலிருந்து பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் வைக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், 29.10.2021 நாளிட்ட ஆணையரின் கடிதத்தினை

இம்முறைமன்றத்தில் மேல் விளக்கமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

7. இதனை தொடர்ந்து நகராட்சி ஆணையர் தன்னுடைய 09.11.2021 நாளிட்ட கடிதத்தில் 2018-2019 ஆம் ஆண்டின் தணிக்கை தடை பத்தி எண்.23-ல் தெரிவிக்கப்பட்டுள்ள இழப்பீடு தொகை ரூ.1,75,536/-ஐ சம்மந்தப்பட்ட M/s. சன்வியூ எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரரின் டேவணி தொகையிலிருந்து பிடித்தம் செய்து, நகராட்சி கணக்கில் 09.11.2021ல் வரவாக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தணிக்கை தடை நீக்கம் தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை மண்டல இணை இயக்குநர் அவர்களின் மூலம் தடையினை நீக்கம் செய்யவும் நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

8. இந்நேர்வில் மனுதாரரது மனு, மனுதாரரின் மனு சம்பந்தமாக திருவேற்காடு நகராட்சியின் முன்னாள் ஆணையர்கள் அளித்த விளக்கங்கள், தற்போதைய ஆணையர் அளித்த அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இந்நேர்வில் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் கீழ்க்காணும் முறைகேடுகள் நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது:-

- 2018-2019–ல் ஒப்பந்த பணி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு 2X36 W CFL light and 70 W SV lamp ஆகியவை சரியாக பராமரிக்கபடவில்லை என நகராட்சி உதவி பொறியாளர் சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நோட்டிஸ் அனுப்பி அந்நிறுவனத்திடம் இருந்து ரூ.1.75 இலட்சம் பிடித்தம் செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார். தணிக்கை தடை குறிப்பிலும் இது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த குற்றச்சாட்டு சம்பந்தமாக எவ்வித மேல் நடவடிக்கையும் நகராட்சியில் எடுக்கப்படவில்லை.

- 2018-2019–ல் தெரு விளக்குகள் சரியாக பராமரிக்கபடவில்லை என்ற குற்றச்சாட்டு நிலுவையில் இருந்த நிலையில் அதை மறைத்து சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு 2019-2020-க்கான தெருவிளக்கு ஒப்பந்த பணியை நீட்டித்து வழங்கியது.

- தணிக்கை தடையில் சுட்டி காட்டியவாறு சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் இருந்து ரூ.1.75 இலட்சம் குறிப்பிட்ட காலத்தில் பிடித்தம் செய்யாமல் காலம் கடத்தியது. மனுதாரரது மனு மற்றும் விசாரணையில் இம்முறைமன்ற அறிவுறுத்தலுக்கு பின்னரே சன் வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் இருந்து ரூ.1.75 இலட்சத்தை நகராட்சி நிர்வாகம் பிடித்தம் செய்துள்ளது புலனாகிறது. இந்நேர்வில் நகராட்சி வருவாய் குறித்து கவனம் செலுத்தாமலும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் சம்பந்தமான குற்றச்சாட்டுகள் மீது முறையாக நடவடிக்கை எடுக்க தவறிய சம்பந்தப்பட்ட நகராட்சி பணியாளர்கள் / அலுவலர்கள் மீது துறை வாரியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

நகராட்சிக்கு ஏற்பட்ட நிதி இழப்பை சம்பந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகளிடம் பிடித்தம் செய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்குமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.வி.அன்பழகன்,
13/9, மல்லியம் நரசிம்மன் நகர்,
பூந்தமல்லி, சென்னை – 600 056.

2) ஆணையாளர்,
திருவேற்காடு நகராட்சி,
திருவேற்காடு.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்:

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.